**செய்தி வெளியீடு எண்: 849** **நாள்:10.11.2020**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களின் அறிக்கை – நாள் 10.11.2020**

காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு R. துரைக்கண்ணு அவர்கள் கடந்த **31.10.2020** அன்று இரவு **11.15** மணிக்கு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் எந்த ஒரு குறையும் கண்டுபிடிக்க முடியாத மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சட்டமன்றத் தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இறப்பு குறித்து பொய்யான அறிக்கைகள் வெளியிட்டு, மலிவான அரசியலை தொடர்ந்து செய்துகொண்டு வருகிறார்.

மறைந்த வேளாண்மைத்துறை அமைச்சர் திரு R. துரைக்கண்ணு அவர்கள், கொரோனா நோய்த் தொற்றுக்கு உள்ளாகி மூச்சுத்திணறல் ஏற்பட்டபோது உடனடியாக விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் **12.10.2020** அன்று அனுமதிக்கப்பட்டார். அவருடைய குடும்பத்தினரின் விருப்பத்திற்கு இணங்கவும், அன்னார் நீரிழிவு, இரத்த அழுத்தம் மற்றும் இருதய நோய் ஆகியவற்றுக்காக ஏற்கனவே சிகிச்சை பெற்று வந்த காவேரி மருத்துவமனையில் அன்னாரது விருப்பத்தின் பேரில் தொடர் சிகிச்சைக்காக **13.10.2020** அன்று அதிகாலை அனுமதிக்கப்பட்டார்.

**13.10.2020** முதல் அவருக்கு, உரிய உயர் சிகிச்சைகள், காவேரி மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் குழுவினால் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தது. நானும், தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளரும்,

காவேரி மருத்துவமனையின் மருத்துவக் குழுவினருடன் இணைந்து பணியாற்றிட அமைக்கப்பட்ட, சென்னை அரசு இராஜீவ் காந்தி பொது மருத்துவமனையின் ஒரு சிறப்பு மருத்துவ வல்லுனர் குழுவும், மாண்புமிகு அமைச்சரின் உடல்நிலையை தொடர்ந்து கண்காணித்து வந்தோம். இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் சிறப்பு மருத்துவ வல்லுநர் குழுவினரும், தனியார் மருத்துவமனையை தொடர்பு கொண்டு சிகிச்சை விவரங்கள் அறிந்து உரிய ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கி வந்தனர். மாண்புமிகு அமைச்சரின் உடல்நலத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் மருத்துவமனைக்கு நேரில் சென்று மருத்துவக்குழுவினரிடம் விசாரித்தனர்.

உயிர் காக்கும் உயரிய மருந்துகளான Remdesvir, Piperacillin tazobactam, Dexamethasone, dalteparin, Meropenem, Linezolid போன்ற மருந்துகள் அளிக்கப்பட்டதனால், அவரது உடல்நிலையில் சிறிதளவு முன்னேற்றம் ஏற்பட்டபோதிலும், அவருக்கு தொடர்ந்து அதிக அளவில் பிராணவாயு கொடுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், 24.10.2020லிருந்து அவருக்கு நுரையீரல் பாதிப்பு 90 சதவீதமாக அதிகரித்த காரணத்தினால், பல முக்கிய உறுப்புகள் செயலிழக்கத் தொடங்கின. காவேரி மருத்துவமனையின் சிறப்பு மருத்துவ வல்லுநர் குழுவின் ஆலோசனைப்படியும், இராஜீவ் காந்தி பொது மருத்துவமனையின் சிறப்பு மருத்துவ வல்லுனர் குழுவின் ஆலோசனைப்படியும், அன்னாரது குடும்பத்தினரின் ஒப்புதலுடன் ECMO என்ற உயிர்காக்கும் கருவி மூலம் அவரது நுரையீரல் இயக்கப்பட்டது. 25.10.2020 அன்று அவருக்கு மாரடைப்பு ஏற்பட்ட காரணத்தினால், அவருடைய இருதய துடிப்பு சீர் செய்யப்பட்டு தொடர்ந்து VA ECMO மூலம் அவருடைய

இருதயம் இயக்கப்பட்டது. இதனால், **26.10.2020** மற்றும் **27.10.2020** ஆகிய இரண்டு தினங்களில் மாண்புமிகு அமைச்சரது கண் இமைகள் மற்றும் கை கால்களில் அசைவும் இருந்ததை மருத்துவக்குழுவினர் கண்டறிந்தனர்.

இவ்வாறு மாண்புமிகு அமைச்சருக்கு பல்வேறு உயர்தர தொடர் சிகிச்சைகள் மருத்துவ வல்லுனர் குழுவினரால் பல்வேறு நிலைகளில் அளிக்கப்பட்டு வந்த போதிலும், அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்து, அனைத்து முயற்சிகளும் பலன் அளிக்காமல் **31.10.2020** அன்று இரவு **11.15** மணிக்கு உயிரிழந்தார்.

மேலும், காவேரி மருத்துவமனை நிர்வாகம், மாண்புமிகு அமைச்சரின் சிகிச்சை காலத்தில் அதாவது சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து, இறப்பு வரை அன்னாரது உடல்நிலை குறித்த மருத்துவமனை அறிக்கையை, அவ்வப்போது வெளியிட்டு வந்தது. காவேரி மருத்துவமனையும், மறைந்த அமைச்சர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட தொடர் சிகிச்சைகள் குறித்து அதன் இறப்பு அறிக்கையில் விவரமாக கொடுத்துள்ளது. (மருத்துவமனையின் அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது.)

மேலும், மறைந்த அமைச்சருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைக்கான விவரங்களை காவேரி மருத்துவமனையின் பதிவேடுகள் மற்றும் பிற ஆவணங்களை மாநில மேல் முறையீட்டு அலுவலர் (தமிழ்நாடு மருத்துவமனைகள் முறைபடுத்தும் சட்டம்) மற்றும் இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் ஆய்வு செய்து அவர்களுடைய அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்துள்ளனர். (அவரது அறிக்கைகளும், இணைக்கப்பட்டுள்ளது.) மறைந்த அமைச்சரின் உடல்நிலை பற்றியோ,

அவருக்கு அளிக்கப்பட்டு வந்த சிகிச்சை பற்றியோ, அரசோ, மருத்துவமனையோ எதையும் மறைக்கவில்லை.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தந்த பொய்யான அறிக்கையின் மீது என்னுடைய விளக்கத்தினையும், மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகளையும் நான் எடுத்துக்கூற கடமைப் பட்டுள்ளேன். "**மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு ஒவ்வொரு உயிரும் முக்கியம்**" என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உயரிய நோக்கத்தின் அடிப்படையில் தான் நாங்கள் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றோம். திமுக கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு ஜெ. அன்பழகன் அவர்கள் சிகிச்சையில் இருந்தபோது, உயரிய மருந்துகள் வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, உடனடியாக அவருக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு தேவையான மருந்துகளை அளித்தது.

கடவுளுக்கு நிகராக பணி செய்கின்ற நமது மருத்துவர்களின் சேவையை கொச்சைப்படுத்தும் விதமாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய அறிக்கை அமைந்துள்ளது. மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் சிகிச்சை பெற்றுவந்த காவேரி மருத்துவமனையில்தான் முன்னாள் முதலமைச்சர் திரு மு,. கருணாநிதி அவர்களும் சிகிச்சை பெற்றார் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அரசியல் செய்ய எத்தனையோ காரணங்கள் இருந்தபோதிலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் இறப்பிலும் அரசியல் லாபம் தேடும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரை தமிழ்நாடு பெற்றுள்ளது நமக்கெல்லாம் துரதிருஷ்டம். அவருடைய இந்த செயல் கண்டிக்கத்தக்கது. மறைந்த

அமைச்சரின் இறப்பின்மீது பொய்யான அறிக்கைகளை வெளியிட்ட மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் மீது சட்டரீதியாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**சி. விஜயபாஸ்கர்**
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
அமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

kauvery hospital

Date: 09/11/2020

From

Dr.K. Mahesh Kumar MD.,

Medical administrator

Kauvery Hospital

Chennai-600 004

To

Dr. A. Viswanathan, MS.,

Competent Authority, Chennai District

Tamil Nadu Clinical Establishment Act,

O/o Director of Medical and Rural Health Services,

Chennai- 600 006

**Sub**: Tamil Nadu Clinical Establishment Act – Requesting for treatment details of Honorable Minister for Agriculture, Government of Tamil Nadu – Regarding.

Respected Sir,

With reference to the letter dated:09/11/2020, We have attached the copies of original case sheets, investigation reports and discharge summary of late Thiru R.Dorai Kannu, Hon'ble Minister for Agriculture , Government of Tamil Nadu.

**Dr. K. Mahesh Kumar**

**Medical Administrator**

Dr. K. Mahesh Kumar, MBBS, MD
Medical Administrator
Kauvery Hospital, Chennai.

Kauvery Hospital
No. 199, Luz Church Road, Mylapore, Chennai - 600 004 Tel : 044 - 4000 6000
Regd. Office : New No. 17A, Old No. 8A, Murray's Gate Road, Alwarpet, Chennai - 600 018
E: info@kauveryhospital.com; W: www.kauveryhospital.com
Chennai | Trichy | Karaikudi | Hosur | Salem

# DEATH SUMMARY

| | | | |
|---|---|---|---|
| Patient Name | Mr.Doraikkannu R | Date of Admission | 13/10/2020 04:41 PM |
| Age/Gender | 72Years / Male | Date of Death | 31/10/2020 |
| Address | 4/92, Andi Street, Rajagiri, Papanasam Taluk, Rajagiri, Thanjavur, Rajaghiri, Tamilnadu, 614207 | UHID | CM180000046448 |
| Mobile No | 9840210122 | IP No | IP0000024382 |
| Doctor | **Dr. SRIDHAR N, MBBS , MD ( Intensivist )** | Department | **Intensivist** |
| Corporate | General - C19 | Ward / Bed | BPW / BP - 1 |

**DIAGNOSIS:**
- SEVERE ARDS - COVID POSITIVE
- SEPTIC SHOCK

**Treating panel of doctors**

Dr. Sridhar - Intensivist
Dr.Sivaramakannan - General physician
Dr.Vijayalakshmi - Infectious disease consultant
Dr.Ananthasubramanium - Pulmonologist
Dr.KP Sureshkumar - Cardiologist
Dr.Gopalamurugan - Cardiologist
Dr.Niraj Joshi - ENT surgeon

**Specialist Inputs from:**

Dr.Therani Rajan -Dean MMC and RGGGH
Dr.V.Rajendran - State COVID Nodal officer and Associate Professor of medicine, MMC and RGGGH.
Dr. Mahilmaran - HOD Pulmonologist Dept, RGGGH
Dr. Sathya - Intensivist MIOT Hospital
Dr. Subramaniam - Infectious Disease Specialist Global Hospital

**PAST MEDICAL HISTORY:**
- CORONARY ARTERY DISEASE MODERATE LV DYSFUNCTION
- SYSTEMIC HYPERTENSION
- TYPE 2 DIABETES MELLITUS

SRI KAUVERY MEDICAL CARE (INDIA) LTD. CHENNAI

## DEATH SUMMARY

### COURSE IN THE HOSPITAL:

Mr. Doraikkannu R, 72 yr old gentleman, known case of CAD, DM and hypertension was admitted on 13/10/20 with cough for 7 days and breathing difficulty for 1 day.He was initially managed in Govt.Villupuram medical college and shifted here for further care.

On admission he was conscious, oriented, HR -112/min, BP-140/70 mm Hg. SpO2-95% with 15 litres/min NRBM. His RT PCR swab was positive. CT Chest findings were consistent with diagnosis of COVID pneumonia, CT severity score - 14/25. 2D Echo showed inferior wall hypokinesia with ejection fraction of 45%. He was commenced on high flow nasal oxygen with flow 60l/min and 60 % FiO2 and started on Remdesivir, dexamethasone and dalteparin. He cooperated with awake proning. Cardiologist opinion was sought and antiplatelets, statins, antianginal and antihypertensives were continued. Negative balance was achieved with diuretics. On 16/10/20 his condition was discussed with visiting experts from RGGGH and their suggestions followed including test for Anti CoV antibodies. As he was antibody positive, decision was made not to transfuse convalescent plasma.

On 17/10/20 there was a drop in blood pressure and Piperacillin tazobactam was commenced after taking cultures.
On 21/10/20 following a fever spike, antibiotics were escalated to Meropenem and Linezolid after discussion with medical experts from RGGGH. On 22/10/2020 he started to develop respiratory fatigue, became drowsy and tachypneic, and was non compliant with non invasive ventilation and hence was intubated and prone ventilated.

CT on 24/10/2020 showed severity score - 23/25 with close to 90 percent lung involvement. As he had severe ARDS with Murrays score of 3 and single organ dysfunction, the ECMO team advised commencement of ECMO. As this was a critical decision, the treating panel of doctors from Kauvery sought inputs from specialists at Rajiv Gandhi Govt. General Hospital and critical care specialist at MIOT and after discussion with family decided to proceed with VV ECMO and cannulation was done on 24/10/20.

SRI KAUVERY MEDICAL CARE (INDIA) LTD. CHENNAI

## DEATH SUMMARY

On 25/10/20 , early morning, patient suffered a VF arrest and patient was shocked multiple times, CPR continued and VV ECMO was converted to VA ECMO. Family updated in the morning of 25/10/20 about VF arrest secondary to Myocardial infarction and restoration of heart function following CPR and defibrillation. He was then cooled post cardiac arrest and and clotting abnormalities corrected with blood products.

During sedation hold on 26/10 and again on 27/10, he opened his eyes and there was limb movement. He also had an EEG on 27/10 which showed generalised slowing and inspite of sedation there was modulation of response with painful stimulation suggesting some response.

He remained on VA ECMO and ventilator support and received blood products to correct clotting abnormalities.
On 29th antibiotics were escalated to Polymyxin after discussion with ID consultant due to rising inflammatory markers.

On 31/10/20 there was further deterioration with drop in blood pressure necessitating introduction of inotropes. Second opinion was sought from ID Specialist Dr.Subramaniam from Global hospital, who reviewed him personally and advised additional tests. Inotrope requirement increased rapidly over a matter of hours and family were once again updated about the deterioration. He progressively worsened and developed vasopressor refractory hypotension and suffered an asystolic arrest at 10.15 pm and despite maximal resuscitation for an hour patient could not be revived and there was no return of cardiac activity and patient was declared dead at 11.15 pm.

**CAUSE OF DEATH:**
- SEPTIC SHOCK
- COVID PNEUMONIA

N. Sridhar

**Dr. SRIDHAR N, MBBS , MD ( Intensivist )**

SRI KAUVERY MEDICAL CARE (INDIA) LTD. CHENNAI



**Kauvery Hospital**
No. 199, Luz Church Road, Mylapore, Chennai - 600 004 Tel : 044 - 4000 6000
**Regd. Office :** New No. 17A, Old No. 8A, Murray's Gate Road, Alwarpet, Chennai - 600 018
E: info@kauveryhospital.com; W: www.kauveryhospital.com
**Chennai | Trichy | Karaikudi | Hosur | Salem**